## கோறளைப்பற்று பிரதேச சபை - 2024

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 10(1) இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கோறளைப்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏறபடுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 07 நூலகங்களுக்கு மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்த புத்தகங்கள் ரூபா 9,180,775 இல் விலை அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. இதனால் அத்தொகையால் சொத்துக்கள் அதிகரித்திருந்தன | இவை சீர் செய்யப்பட்டு சொத்தாக சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில்சரியாக காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தம் 6,304 புத்தகங்களின் பெறுமதிகள் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுக்கான இறுதிக் கணக்கறிக்கையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புத்தகங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நுகர்வு பொருட்கள் மற்றும் மின்குமிழ் சாதன இருப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,987,273 நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | இருப்பின் பெறுமதியினை சொத்துக்களாக கணக்குகளில் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 04 சுற்றுலா உணவகங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய குப்பை வரி ரூபா 489,000 ஆனது நிதிக்கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அறவிட வேண்டிய வருமானங்கள் கணக்குகளில் சொத்தாக காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் 93 வகையான 571 எண்ணிக்கையான பொருட்கள் ஏலவிற்பனை மற்றும் அகற்றல் மூலம் அப்புறப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சொத்துக்களின் கிரயப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றல் செய்யப்பட்டிருக்கவில்லை. | அகற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கிரய பெறுமதி கணிக்கப்பட்டு சொத்துக்களில் இருந்து அதன் பெறுமதி கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அகற்றல் செய்யப்படும் சொத்துக்கள் அதன் கிரயங்களில் இருந்து கழித்துக்காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 25,548,271 ஆன 06 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள் மற்றும் முற்பணப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் பேணப்படுவதுடன் அவைதொடர்பான குறைபாடுகள் சீர்செய்ய நடடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் ஆவணங்களை திரட்டி ஏடுகளில் பதிவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 24 (1) பிரிவு | சபையினால் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற 740 வீதிகளை அடையாளப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற் கான நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம், அடையாளப்படுத்தப்பட்ட வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | 371(5) | கடந்த காலங்களில் சபையின் திண்மக்கழிவு நிலையம் தொடர்பில் வழங்கப்பட்ட ரூபா | கடந்த கால திண்மக்கழிவு தொடர்பான முற்பணங்கள் | முற்பண கொடுப்பனவு களை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3,344,907 ஆன முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு 20 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 571(1), (2), (3) | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,664,637 ஆன காலங்கடந்த 04 வகையான வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | காலங்கடந்த வைப்பு வகைகளை இனங்கண்டு சீர்செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 65,381,930 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 45,931,332 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன

| | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 22,600,000 | 1,340,170 | 1,340,170 | -- | 1,700,000 | 1,043,235 | 1,043,235 | -- |
| வாடகை | 16,469,600 | 9,273,392 | 9,225,892 | 21,336,628 | 11,924,000 | 30,350,442 | 9,013,814 | 21,336,628 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3,973,000 | 6,196,045 | 6,196,045 | -- | 3,739,000 | 6,169,256 | 6,169,256 | -- |
| ஏனைய வருமானம் | 16,290,000 | 10,245,569 | 10,245,569 | 545,000 | 27,695,000 | 11,898,919 | 11,353,919 | 545,000 |
| | 59,332,600 | 27,055,176 | 27,007,676 | 21,881,628 | 45,058,000 | 49,461,852 | 27,580,224 | 2,881,628 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| 55 குத்தகைத்தாரர்களிடம் அறவிடப்பட வேண்டிய குத்தகை வருமான நிலுவை மற்றும் வாகனங்கள் மூலமான வாடகை நிலுவை ஆகியவற்றின் கூட்டு மொத்தத் தொகை ரூபா 23,714,030 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை 03 தொடக்கம் 11 வருடத்திற்கு மேலாக எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரியவர்களிடம் முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கடை வாடகை மற்றும் குத்தகை நிலுவையினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) அனுமதிப் பத்திரக் கட்டணம்** | | |
| 1987 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவிற்கமைவாக, இலங்கை உல்லாச பிரயாண சபையின் 1968 இன் 14ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்பட்ட உணவுச்சாலை அல்லது உறையகம் என்பவற்றின் மொத்த வியாபார வருமானத்தின் மீதான ஒரு சதவீதத்தினை விஞ்சாத உரிமத் தீர்வையினை அறவிட வேண்டிய போதிலும், சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட 17 பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாதுறைசார் நிறுவனம் மற்றும் சேவை வழங்குனரிடமிருந்து ரூபா 100,000 இனை நிலையான உரிமத் தீர்வையாக அறவிடப்படுகின்றமையினால் சட்ட ஏற்பாட்டின் கீழான வருமானத்தை அறவிட முடியாமல் இழந்து வருகின்றது. | அறவிடுதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம் உரிமத் தீர்வையினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம், குத்தகை நிலுவைத் தொகையில் 10 சதவீத தண்டப்பணம் குத்தகை பெறுனரிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டியபோதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை உள்ள 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட குத்தகை நிலுவைத் தொகையான ரூபா 20,242,578 இற்கு எவ்வித தண்டப்பணமும் சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குத்தகைகள் தொடர்பாக உரியவர்களிடம் முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் தண்டம் அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஈ) முத்திரைத் தீர்வைகள்** | | |
| மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைக்கப்பெறவேண்டிய கடந்த 14 ஆண்டுகளுக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணத் தொகையான ரூபா 18,378,567 இனை மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | முத்திரைத் தீர்வையினை மீளப்பெற்றுக் கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 509,634 ஆனது, முற்பண வருமதியிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. இப்பதிவழிப்பிற்கான முறையான அனுமதி மற்றும் சபைத் தீர்மானங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகள் சீர்செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | முறையான அனுமதி மற்றும் சபைத் தீர்மானங்களின் பிரகாரம் பதிவிளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஜேசிபி இயந்திரத் திருத்தத்திற்காக ரூபா 3,649,438 இனை செலவிடப்பட்டிருந்ததோடு, மீளாய்வாண்டில் எவ்விதமான வருமானத்தையும் உழைத்திருக்கவில்லை. எனினும், சபையானது தனியார் ஜேசிபி இயந்திரங்களை சபை வேலைக்காக 06 தடவைகள் வாடகைக்கு பெறப்பட்டு ரூபா 1,904,700 இனை கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | பொதுக்களின் கோரிக்கை மற்றும் வெள்ள அனர்த்த காலங்கள் தேவையின் நிமிர்தம் தனியாரிடமிருந்து JCB வாகனம் வாடகைக்கு பெறப்படுகின்றது | சபையின் குறித்த இயந்திரத்தினை வினைத்திறனாக பயன்படுத்தி வருமானத்தினை உழைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையின் நிர்வாக எல்லைக்குள் பாசிக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள ஆடை மாற்றும் நிலையம் மற்றும் குளியலறைகளுக்கான நீர் விநியோகக் கட்டணம் தொடர்பாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் மேற்கொள்ளப்பட்ட பரஸ்பர புரிந்துணர்வு உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நீரின் விரிவான நீர்ப்பட்டியல் இன்றி சபையினால் ரூபா 1,000,000 கொடுப்பனவானது, சபைத்தீர்மானம் மற்றும் அரச நிதி ஒழுங்குவிதிகளுக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றுலா அதிகார சபையுடன் உடன்படிக்கையை புதுப்பித்துகொள்ளல் என்ற அடிப்படையில் செயலாளரின் தீர்மானத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | சபைத்தீர்மானம் மற்றும் அரச நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் வருமான நிலுவை அறவீட்டை அறவிடும் நோக்கில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 600,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இணையப்பொதி வடிவமைப்பினை நிறுவி அதனூடாக நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டிருந்தது. | சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இணையப்பொதியினை பயன்படுத்தி நிலுவையினை துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,082,500 மல்டி சொப்பர் இயந்திரம் (Multi Shopper) மற்றும் சுழலும் வடிகட்டி இயந்திரங்களினை (Rotating Strainer) அத் திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு நான்கு ஆண்டுகளாக சபையினால் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. | - மேற்படி - | இயந்திரங்களை திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் ரூபா 4,157,781 நிர்மாணிக்கப்பட்ட வாகன திருத்தும் நிலையமும் மற்றும் அந் நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,627,346 நீர் இறைக்கும் இயந்திரம் உட்பட 14 வகையான வாகன உபகரணங்களும் பாவனையின்றி சபை வளாகத்தில் விளைவற்றுக் காணப்பட்டிருந்தன. | வாகனப் பராமரிப்பு நிலையம் தொடர்பான குறையாக காணப்பட்ட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு விரைவில் இயங்கு நிலைக்கு கொண்டு வரப்படும். | வாகன திருத்தும் நிலையம் மற்றும் அதில் உள்ள இயந்திர உபகரணங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | உள்ளுராட்சி அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் ரூபா 16,253,511 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 04 கொள்கலன் கடைகளை திட்ட முன்மொழிவின்படி உரிய 16 பயனாளிகளில், 04 பயனாளிகளிற்கு வழங்கி வருமானங்களை உழைப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறிப்பிட்ட 4 பயனாளிகளுக்குரிய கொள்கலனை தொடர்பாக பயனாளிகளின் கோரிக்கைக்கு அமைவாக புதிய இடத்தில் வைக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கொள்கலன் கடைகளை பயனாளிகளுக்கு வழங்கி வருமானத்தினை உழைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரிலுள்ள 16 வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி வாகனங்களின் உரிமைமாற்றம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் உரிமையினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக பழுதடைந்த நிலையில் காணப்பட்டிருந்த 18 வாகனங்களினை திருத்தம் செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தக்கூடிய அனைத்து வாகங்களை திருத்தம் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கபடும். | பழுதடைந்த வாகனங்களை திருத்துவதற்கு அல்லது ஏலமிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நாய்கள் பராமரிப்பு நிலைய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா | நாய்களை பராமரிப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப் | ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகள் |

| | | |
|---|---|---|
| 3,000,000 இனை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளாது கைவிடப்பட்டது. | பட்டுள்ளதுடன் தற்போது உள்ள வளங்களை அடிப்படையாக கொண்டு எதிர்காலத்தில் வருமானத்ததை பெறக்கூடியதான செயற்திட்டங்கள் மேற்கொள்வதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் சபையினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது எரிபொருள் கட்டளையினை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி பணமோசடியில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் பணித்தடை செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவீடு செய்ய வேண்டிய ரூபா 1,359,747 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரியவரிடம் இருந்நு அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | குறித்த உத்தியோகத்தரிடம் இருந்து ஏற்பட்ட இழப்பபை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இடர்கடன் மற்றும் ஏனைய கடன் தொடர்பில் இளைப்பாறிய, காலஞ்சென்ற மற்றும் வெளிநாடு சென்ற 05 பணியாளர்களிடமிருந்து ரூபா 445,208 தொகையினை 02 ஆண்டுகளுக்கு மேலாகவும், இடமாற்றம் பெற்றுச்சென்ற 09 பணியாளர்களிடமிருந்து ரூபா 32,137 இனை 11 ஆண்டுகளுக்கு மேலாகவும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | - மேற்படி - | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல. DMA/01-2019 இன் பந்தி 6 இன் பிரகாரம், மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு திட்டமொன்று சபையில் காணப்பட்டிருக்கவில்லை. மேலும், சபையில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கவில்லை. | உள்ளக்காய்வு குழு அமைக்கப்பட்டு அதன் பணிகள் தொடர்பான போதிய ஆலோசனைகள் வழங்ப்பட்டு போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம், உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சபையின் செலவீன அறிக்கைகளின் பிரகாரம் 05 நலன்புரி வேலைத்திட்டங்களுக்காக 15 செலவீன விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 9,400,000 இனை நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமையினால் அந் நிதியேற்பாடுகளிலிருந்து 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தன. | வருமானப் பற்றாக்குறை தற்போது காணப்படுகிறது. போதிய வருமானங்கள் கிடைக்கபெறும் போது இவ்வாறான நலன்புரி வேலைகளை குறிப்பட்ட அளவு செயற்படுத்த முடியும். | நிதியேற்பாடு வினைத்திறனாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.4 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையினால் வருடாந்தம் 266 மெட்ரிக்தொன் உக்கமுடியாத கழிவுகள் மற்றும் 3,287 மெட்ரிக்தொன் உக்கக்கூடிய கழிவுகள் சேகரிக்கப்படுகின்ற போதிலும், இக் கழிவுகளை பயன்படுத்தி சேதனப்பசளை உற்பத்தி செய்வதற்கான அல்லது மீள் பாவனைக்காக பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது அகற்றப்படுவதை அவதானிக்க முடிந்தது | உக்கக்கூடிய கழிவுகளை கொண்டு சேதனைப் பசளைகளை உற்பத்தி செய்தற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திண்மக் கழிவுகளை பயன்படுத்தி சேதனப்பசளை உற்பத்தி செய்வதற்கு அல்லது மீள் பாவனைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |